## இஸ்லாமியக் கலாச்சாரத்தின் அரசியல் கோணங்கள்

இஸ்லாமிய மார்க்கம் அகிலங்களுக்கே மாபெரும் கருணையாக அமைந்துள்ளது. இஸ்லாமியப் போதனைகள் மக்கள் சமுதாயத்தை ஒழுக்கக்கேடு, அராஜகம் மற்றும் கலகங்கள் குழப்பங்களிலிருந்து பாதுகாப்பளிக்கின்றன மற்றும் இவ்வுலகிலும் மறுமையிலும் அனைத்து நற்பேறுகளுக்கான உத்திரவாதமாகவும் உள்ளன. நபித்தோழர்கள் (ர) இஸ்லாமியப் போதனைகளைப் பின்பற்றி நடந்தபோது உலகமே அவர்களைப் பின்தொடர ஆரம்பித்தது. அவர்கள் ஒரு வலிமைமிக்க, உறுதியான மற்றும் விரிவான கலாச்சார மற்றும் அறிவியல் கலைகளின் ஆதாரமான ஒரு சாம்ராஜ்ஜியத்தையே வடிவமைத்தனர், இதற்கு அவர்கள் படைத்துள்ள சரித்திரமே அதற்கான அத்தாட்சியாக அமைந்துள்ளது.

இஸ்லாம் உலகத்தின் எந்த சமுதாயத்திலும் பெறப்படாத, அவர்களால் நினைத்தும்கூட பார்க்க முடியாத, சீரான சட்டதிட்டங்களை இந்த உலகத்திற்கு வழங்கியுள்ளது. இவை ஒரு முழுமையான மற்றும் மனித சமுதாயத்தின் அனைத்து அம்சங்களையும் ஒருங்கே பெற்ற சட்டதிட்டங்கள் என்ற வகையில், இதனைப்போன்ற சட்டதிட்டங்கள் கடந்த கால சமூகங்களில் காணப்படவில்லை. அத்துடன், இஸ்லாமியச் சட்டங்களும் அமைப்பும், இதற்குமுன் கடைபிடிக்கப்பட்டுவந்துள்ள சட்டதிட்டங்களில் சாதாரணமான வகையிலோ அல்லது அசாதாரணமான வகையிலோ மேம்படுத்தப்பட்டவையாகவோ இருக்கவில்லை, மாறாக, இவை முற்றிலுமாகவே புதுமையான ஒன்றாக இருந்தன.

சந்தேகமின்றி, இஸ்லாமிய ஆட்சி மற்றும் சமுதாயத்தின் சட்டதிட்டங்கள் அனைத்தின்அடிப்படை மற்றும்ஆதாரங்கள் திருக்ஃகுர்னையே அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டவையாக உள்ளன. திருக்ஃகுர்ஆன் என்பது எத்தகைய வேதம் என்றால், அதில் பொய்யான அடிப்படைகள் அல்லது தாக்கங்கள் எந்தத் திசையிலிருந்தும் ஊடுருவுவது இயலாத ஒன்றாகவே இருக்கின்றது. இஸ்லாமிய அமைப்பிலான ஆட்சியின் முக்கியத்துவத்தைக் கருதி, ஆட்சியாளர் மற்றும் குடிமக்களுக்கான பொறுப்புகளை இஸ்லாம் வரையறுத்து வகுத்துத் தந்துள்ளது. ஆட்சியாளர்கள் தங்களுடைய இச்சைகளைப்பின்பற்றுவதுதடுக்கப்பட்டள்ளதோடு அவர்கள் அறிவுறுத்தவும் பட்டுள்ளார்கள். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

فَٱحۡكُم بَيۡنَ ٱلنَّاسِ بِٱلۡحَقِّ وَلَا تَتَّبِعِ ٱلۡهَوَىٰ فَيُضِلَّكَ عَن سَبِيلِ ٱللَّهِۚ ﴿٢٦﴾ ص 26)

www.uzairtalahi.com

*பொருள்: எனவே, நீர் மக்களிடையே நீதியுடன் ஆட்சி செலுத்தும், மேலும், மன இச்சைகளைப் பின்பற்றாதீர், அது அல்லாஹ்வின் வழியிலிருந்து உம்மைப் பிறழச்செய்துவிடும் (ஸாத்:26)*

அல்லாஹ் தஆலா மற்றொரு இடத்தில் கூறுகின்றான்:

وَأَنِ ٱحۡكُم بَيۡنَهُم بِمَآ أَنزَلَ ٱللَّهُ وَلَا تَتَّبِعۡ أَهۡوَآءَهُمۡ وَٱحۡذَرۡهُمۡ أَن يَفۡتِنُوكَ عَنۢ بَعۡضِ مَآ أَنزَلَ ٱللَّهُ إِلَيۡكَۖ

فَإِن تَوَلَّوۡاْ فَٱعۡلَمۡ أَنَّمَا يُرِيدُ ٱللَّهُ أَن يُصِيبَهُم بِبَعۡضِ ذُنُوبِهِمۡۗ وَإِنَّ كَثِيرٗا مِّنَ ٱلنَّاسِ لَفَٰسِقُونَ ﴿٤٩﴾ المائد 49)

*பொருள்: எனவே, நபியே, அல்லாஹ் இறக்கியருளிய சட்டத்திற்கேற்ப அவர்களுடைய விவகாரங்களில் தீர்ப்பளியுங்கள், அவர்களுடைய ஆசா பாசங்களைப் பின்பற்றாதீர்கள், அவர்கள் உம்மைக் குழப்பத்திலாழ்த்தி, அல்லாஹ் உம்மீது இறக்கியருளிய அறிவுரைகள் சிலவற்றிலிருந்து உம்மை இம்மியளவும் நழுவச்செய்திடாவண்ணம் நீர் அவர்களிடம் எச்சரிக்கையாக இருப்பீராக. பிறகும் அவர்கள் இதனைப் புறக்கணித்தார்களானால், அல் லாஹ் அவர்களுடய சில பாவங்களின் காரணமாக, அவர்களைத் துன்பத் தில் அழ்த்திடவே நாடிவிட்டான் என்று அறிந்துகொள்ளுங்கள். மேலும், நிச்சயம் மக்களில் பொரும்பாலானோர் வரம்பு மீறியவர்களாகவே உள்ள னர் (அல் மாயிதா:49)*

அல்லாஹ் தஆலா குடிமக்களையும் சட்ட ரீதியான காரணமின்றி ஆட்சியா ளர்கள் விதிக்கும் சட்டங்களுக்கு மாறு செய்வதிலிருந்தும் தடுத்துள்ளான்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَطِيعُواْ ٱللَّهَ وَأَطِيعُواْ ٱلرَّسُولَ وَأُوْلِي ٱلۡأَمۡرِ مِنكُمۡۖ فَإِن تَنَٰزَعۡتُمۡ فِي شَيۡءٖ فَرُدُّوهُ إِلَى ٱللَّهِ وَٱلرَّسُولِ إِن

كُنتُمۡ تُؤۡمِنُونَ بِٱللَّهِ وَٱلۡيَوۡمِ ٱلۡأٓخِرِۚ ذَٰلِكَ خَيۡرٞ وَأَحۡسَنُ تَأۡوِيلًا ﴿٥٩﴾ النسا 59)

*பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே, அல்லாஹ்வுக்குக் கீழப்படியுங் கள், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள், மேலும், உங்களில் அதிகா ரம் உடையவர்களுக்கும் கீழப்படியுங்கள். பின்னர், ஏதேனும் விவகாரத் தில் நீங்கள் கருத்து வேறுபாடு கொண்டால், அதனை அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடம் திருப்பிவிடுங்கள். நீங்கள் அல்லாஹ்வின்மீதும் மறுமைநாளின்மீதும் நம்பிக்கை கொண்டோராயின், இதுதான் சரியான வழிமுறையாகும். இறுதி விளைவின் கோணத்திலிருந்து பார்த்தாலும் இதுவே சிறந்தது. (அந் நிசா:59)*

www.uzaifalahi.com

இஸ்லாம் மனிதர்களுக்கிடையே நீதியும் நியாயமும் முழுமையாக நிலவ வேண்டும் என்று விரும்புகிறது. ஆகவேதான், அல்லாஹ் தஆலா அநீதி, கொடுமை மற்றும் அதன் விளைவுகளைப்பற்றி மக்களை எச்சரித்துள்ளான், அது முஸ்லிமல்லாதவர்களைப் பொருத்ததாக இருந்தாலும் சரியே, அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

إِنَّ ٱللَّهَ يَأۡمُرُكُمۡ أَن تُؤَدُّواْ ٱلۡأَمَٰنَٰتِ إِلَىٰٓ أَهۡلِهَا وَإِذَا حَكَمۡتُم بَيۡنَ ٱلنَّاسِ أَن تَحۡكُمُواْ بِٱلۡعَدۡلِۚ إِنَّ ٱللَّهَ نِعِمَّا يَعِظُكُم بِهِۦٓۗ إِنَّ ٱللَّهَ كَانَ سَمِيعَۢا بَصِيرٗا ﴿٥٨﴾ ( المائد : 58 )

*பொருள்: அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான், அமானிதங்களான அடைக்கலப் பொருட்களை அவற்றிற்குரியவர்களிடம் நீங்கள் ஒப்படைத்துவிடுங்கள், நீங்கள் மக்களிடையே தீர்ப்பு வழங்கினால், நீதியான முறையில் தீர்ப்பு வழங்குங்கள். நிச்சயமாக, அல்லாஹ் அனைத்தையும் செவியுறுபவனாகவும் உற்று நோக்குபவனாகவும் இருக்கின்றான் (அந் நிசா:58).*

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

اتَّقُوا الظُّلْمَ، فَإِنَّ الظُّلْمَ ظُلُمَاتٌ يَوْمَ الْقِيَامَةِ

*பொருள்: அநீதி மற்றும் கொடுமையைக்கொண்டு அஞ்சுங்கள், ஏனெனில், கொடுமைகளை இழைப்பது மறுமைநாளின் இருள்களாகும் (முஸ்லிம்)*

* * *

www.uzairfalahi.com